**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**ஆண்டிறுதிப்பரீட்சை- 2018**

# பரதநாட்டியம்

**தரம் 9** **நேரம் : 2 மணித்தியாலம்**

## பகுதி 1

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**

1. அவள் அழகாக ஆடினாள் என்பதை அபிநயிக்க பொருத்தமான முத்திரை

   1. பதாகம் 2. சிகரம் 3. அலபத்மம் 4. சதுரம்

2. பிரம்மர முத்திரை கொண்டு அபிநயிக்கக்கூடியது

   1. முயல் 2. மான் 3. கொக்கு 4. வண்டு

3. "தத்தெய்தாம் தித்தெய்தாம்" எனும் சொற்கட்டினை 1ஆம் காலத்தில் தாளக்குறியீட்டில் எழுதும் போது ஒரு ஆவர்த்தனத்தில் இடம்பெறுவது

   1. 1 முறை 2. 2 முறை 3. 3 முறை 4. 4 முறை

4. கோர்வையின் இறுதியில் இடம்பெறுவது

   1. கோர்வையடவு 2. முடிவடவு 3. தட்டிமெட்டடவு 4. குத்தடவு

5. தாள ஆவர்த்தனம் தொடங்க முன்னரே பாடல் ஆரம்பித்தல்

   1. சமஎடுப்பு 2. விஷமஎடுப்பு 3. அநாகதஎடுப்பு 4. அதீதஎடுப்பு

6. தஞ்சை நால்வருள் ஒருவர்

   1. சுப்பையா 2. இராமையா 3. வடிவேலு 4.கோபாலகிருஸ்ணர்

7. காக்கைச் சிறகினிலே என்ற பாடலில் குறிப்பிடப்படும் தெய்வம்

   1. கிருஸ்ணன் 2. சிவன் 3. முருகன் 4. பிள்ளையார்

8. "தாங்கிடு தத்த தின்ன" என்னும் சொற்கட்டிற்குரிய அடவு

   1.தட்டடவு 2. மண்டியடவு 3. மகுடஅடவு 4.மெட்டடவு

9. தாஹதஜெம்தரிதா அடவு அமைந்துள்ள தாளம்

   1.ஆதி 2. ரூபகம் 3.திஸ்ரஏகம் 4. சதுஸ்ரஏகம்

10. தொழில் அடிப்படையில் வகுக்கப்பட்ட ஹஸ்தங்கள்

1.தேவஹஸ்தங்கள் 2.நவக்கிரகஹஸ்தங்கள் 3.ஜாதிஹஸ்தங்கள் 4.பாந்தவ்யஹஸ்தங்கள்

11. அன்பிற்குரிய கடவுள்

1. பார்வதி 2. கணபதி 3. முருகன் 4. மன்மதன்

12. நாட்டிய நாடகத்தில் கதாபாத்திரங்களை பிரித்தறிய வழிவகுக்கும் அபிநயம்

1.ஆங்கிகஅபிநயம் 2.வாச்சிகஅபிநயம் 3. ஆஹார்யஅபிநயம் 4. சாத்வீகஅபிநயம்

13. அம்மனை வேண்டி ஆடப்படும் கிராமிய நடனம்

1. காவடி 2. கரகம் 3. கும்மி 4. கோலாட்டம்

14. அலாரிப்பில் இடம்பெறும் கழுத்தசைவு

1. சுந்தரி 2. திரச்சீனா 3. பரிவர்த்திதா 4. பிரகம்பிதா

15. தித்,; தித்,; தெய்,;;; இதில் வரும் மாத்திரைகளின் எண்ணிக்கை

1. 8 2. 12 3. 16 4. 20

16. "தேவதாகுருவிப்பிராணாம்….." என்ற ஸ்லோகத்தை அபிநயிக்கும் முத்திரை

1. அஞ்சலி 2.கபோதம் 3. கற்கடகம் 4. சுவஸ்திகம்

17. வியாபாரம் செய்யும் ஜாதி

1. சூத்திரர் 2. சத்திரியர் 3. வைசியர் 4. பிராமணர்

18. நடனமாடும் சபையானது அமைந்திருக்க வேண்டியது

1. வேதங்கள் போல் 2. சாஸ்திரங்கள் போல்

3. தும்பிகள் போல் 4. கற்பகவிருட்சம் போல்

19. கிண்கிணியின் தெய்வம்

1. சந்திரன் 2. நட்சத்திரம் 3. சூரியன் 4. சிவன்

20. சிங்கள மக்களுக்குரிய நடனங்களில் ஒன்று

1. கதகளி 2. வெஸ் 3. கதக் 4. கும்மி

(20×2=40 புள்ளிகள்)

# பகுதி II

**விரும்பிய 4 வினாக்களுக்கு விடை தருக**

**1)** 1. மகுட அடவுகள் எவை?

2. இவ்வடவுகள் அமைந்துள்ள தாளம் எது?
3. இவ்வடவிற்குரிய நாட்டியச்சொற்கட்டினை எழுதுக.
4. இவ்வடவுகளில் ஒன்றின் சொற்கட்டினைத் தாள அங்க அடையாளத்துடன் எழுதுக.

(2+2+3+8=15 புள்ளிகள்)

**2)** பின்வரும் முத்திரைகளுக்குரிய விநியோகங்களை எழுதுக.

1. ஹம்ஸாசியம் 2. கபோதம் 3. உத்சங்கம் (3×5=15 புள்ளிகள்)

**3)** 1. நவக்கிரக ஹஸ்தங்கள் எத்தனை வகைப்படும்?

2. இவற்றுக்குரிய வலது, இடதுகை முத்திரைகளை ஒழுங்காகத் தருக.
3. இரு கைகளிலும் ஒரே முத்திரை கொண்டு அபிநயிக்கக்கூடிய தேவ ஹஸ்தங்கள் 5 எழுதுக. (1+9+5=15 புள்ளிகள்)

**4)** 1. கொஹொம்கங்காரிய என்னும் சடங்கு முறையைத் தழுவி எழுந்த இலங்கையின் சாஸ்திரிய நடனம் எது?

2. இந்நடனம் ஆடப்பட்டு வந்த பிரதேசங்களை குறிப்பிடுக.
3. இந்நடனத்திற்குரிய பிரதான வாத்தியம் எது?
4. இந்த நடனத்தின் பிரதான பிரிவுகளைத் தருக.
5. இந்நடனத்திற்கு பயன்படுத்தப்படும் உடையலங்காரங்களைத் தருக.

(2+3+2+4+4=15 புள்ளிகள்)

**5)** பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. சபை 2. அலாரிப்பு 3. கோர்வை (3×5=15 புள்ளிகள்)

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப்பரீட்சை- 2018
பரதநாட்டியம்
தரம் 9

## புள்ளித்திட்டம்

## பகுதி 1

| இல | விடைகள் | இல | விடைகள் |
|---|---|---|---|
| 1. | அலபத்மம் | 11. | மன்மதன் |
| 2. | வண்டு | 12. | ஆகார்யஅபிநயம் |
| 3. | 1 முறை | 13. | கரகம் |
| 4. | முடிவடவு | 14. | சுந்தரி |
| 5. | அதீதஎடுப்பு | 15. | 16 |
| 6. | வடிவேலு | 16. | அஞ்சலி |
| 7. | கிருஸ்ணர் | 17. | வைசியர் |
| 8. | மண்டியடவு | 18. | கற்பகவிருட்சம் போல் |
| 9. | ரூபகம் | 19. | நட்சத்திரம் |
| 10. | ஜாதிஹஸ்தங்கள் | 20 | வெஸ் |

## பகுதி 11

1)
1. ததிங்கிணதொம் , கிடதகதரிகிடதொம்
2. ரூபகம்
3. தெய்திதிதெய் தெய்தெய்திதிதெய் தெய்தெய்தெய்திதிதெய்
4. கார்வைகள் அங்கஅடையாளங்களுடன் எழுதியிருப்பின் முழுப்புள்ளி வழங்கலாம்

(2+2+3+8=15 புள்ளிகள்)

2) விநியோகமும் கருத்தும் எழுதியிருப்பின் முழுப்புள்ளி வழங்கலாம் (3×5=15 புள்ளிகள்)

3)
1. 9
2. வலது இடது முத்திரைகள் ஒவ்வொன்றிற்கும் 1/2புள்ளிகள் வீதம்
3. பிள்ளையார், லக்சுமி, விஸ்ணு, இந்திரன், பார்வதி

(1+9+5=15 புள்ளிகள்)

4)
1. கண்டியநடனம்
2. ஹரிஸ்பந்துவ, மாநுவர, சதரகோரலய, ஹேவாஹெட்ட, யட்டிநுவர
3. கட்டபெர
4. வெஸ், நையாண்டி, உடக்கி, பந்தேரு, வண்ணம்
5. சிவப்பு வெள்ளை நிற உடை, வெள்ளி அணிகலன்கள், மார்புக்கவசம், வெஸ்தொப்பி.

(2+3+2+4+4=15 புள்ளிகள்)

5) ஒவ்வொன்றிற்கும் குறைந்தது 5 விடயங்கள் எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வீதம்
(3×5=15புள்ளிகள்)